20th November 1963]

(b) The allottees will be given the Madras scales of pay for the equated posts in this State or the ex-Travancore-Cochin scales of pay applicable to them immediately before 1st November 1956, whichever is advantageous to them.

### மயிலாப்பூரில் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டிடங்கள்

* 337 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மயிலாப்பூர் தொகுதிக்குள் ஏதாயினும் புதிய கட்டிடங்கள் எழுப்ப இடம் ஏற்பாடு செய்து தரும்படி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்களா?

THE HON. SRI V. RAMAIAH: Yes.

### கூட்டுறவு ஸ்தாபன வழக்குகள்

* 338 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ள வழக்குகளை சிவில் கோர்ட்டுகளுக்கு மாற்ற விதிகள் திருத்தப்படுமா?

(இ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** (அ) கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப்பட்ட ஆரம்ப வழக்குகளைப் பொறுத்தவரையில் சர்க்கார் பரிசீலனையில் அவ்வித கோரிக்கை ஒன்றுமில்லை. கூடிய சீக்கிரம் அமுலுக்கு வரவிருக்கும் 1961-ம் வருஷத்திய கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 96-வது பிரிவின்படி ரிஜிஸ்தரார் செய்யும் சில முடிவுகள், உத்தரவுகளின் மேலும் மற்றும் மத்தியஸ்தர்கள் செய்யும் சில தீர்ப்புகளின்மேலும் சப்ஆர்டினேட் ஜட்ஜின் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு நீதித் துறை அதிகாரியைக் கொண்ட கூட்டுறவு நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யலாம்.

(இ) வடாற்காடு மாவட்டத்தில் 30-6-1963 அன்று பைசல் ஆகாமல் விசாரணையில் இருந்த கூட்டுறவுச் சங்க வழக்குகளின் எண்ணிக்கை ஆயிரத்து அறுநூற்று எண்பத்தொன்று (1681).

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவு ரெஜிஸ்டிரார் அவர்கள் மூலமாக விசாரித்து தீர்க்கும் வழக்குகளில் பெரும்பாலும் நியாயம் கிடைக்கவில்லை. எனவே இவ்வழக்குகள் எல்லாம் சிவில் கோர்ட்டுக்கு விடப்பட்டு விசாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்போதுள்ள முறையிலே காலதாமதம் ஆகிறது என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. வழக்குகளை சீக்கிரமாக முடிக்க